# எத்தியோப்பியா குடியரசின் பிரதம மந்திரியுடனான பிரதமரின் சந்திப்பு

ஆகஸ்ட் 24, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் எத்தியோப்பியா குடியரசின் பிரதம மந்திரி டாக்டர் ஹெச்.இ. அபி அகமது அலி அவர்களை, 24 ஆகஸ்ட் 2023 அன்று ஜோகன்னஸ்பர்க்கில், 15வது பிரிக்ஸ் உச்சிமாநாட்டின்போது சந்தித்தார்.

2. இரு தலைவர்களும் கூட்டாண்மை மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு, வர்த்தகம் மற்றும் முதலீடு, பாதுகாப்பு ஒத்துழைப்பு, தகவல் தொடர்பு தொழில்நுட்பம், விவசாயம், இளைஞர்களின் திறன் மற்றும் மக்களிடையேயான தொடர்பு உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஆக்கப்பூர்வமான விவாதங்களை நடத்தினர். முக்கியமான மண்டல மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

3. பிரிக்ஸ் அமைப்பில் எத்தியோப்பியா உறுப்பினர் ஆனதற்கு பிரதமர் அபி அகமது அவர்களுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார். வாய்ஸ் ஆஃப் க்ளோபல் சவுத் உச்சிமாநாட்டில் பங்கேற்றதற்காக பிரதமர் அபி அகமது அவர்களை அவர் பாராட்டினார்.

4. பிரிக்ஸ் குடும்பத்தில் இணைவதற்கு எத்தியோப்பியாவிற்கு இந்தியா அளித்த ஆதரவிற்கு பிரதமர் அபி அகமது அவர்கள் நன்றி தெரிவித்ததோடு, சந்திரயான் பணியின் வெற்றிக்காக பிரதமரைப் பாராட்டினார், இது எத்தியோப்பியா மற்றும் உலகின் தென்திசை நாடுகளுக்கு பெருமை மற்றும் உத்வேகமானா தருணம் என்று குறிப்பிட்டார்.

**ஜோகன்னஸ்பர்க்**
**ஆகஸ்ட் 24, 2023**